# ஐஏஎஸ்பி 2025 உலக ஆண்டிற்கான அறிமுகம்: குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளில் வலி மேலாண்மை, ஆராய்ச்சி மற்றும் கல்வி

**எழுத்தாளர்கள்:**

- Margarita Calvo, PhD, Pontificia Universidad Católica de Chile, Chile [1,2]
- Saurab Sharma, PhD, Royal North Shore Hospital, Australia [1,3,4,5,6,7]

**அறிமுகம்:**

IASP 2025 உலக ஆண்டுக்கான கருப்பொருள்: "குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளில் வலி மேலாண்மை, கல்வி மற்றும் ஆராய்ச்சி. இந்த கருப்பொருள் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கு (LMICs) அப்பால், குறைந்த வருமான அமைப்புகளையும், பழங்குடி மக்கள், கலாச்சார ரீதியாக வேறுபட்ட குழுக்கள் மற்றும் அதிக வருமானம் உள்ள நாடுகளில் உள்ள அகதிகள் போன்ற முன்னுரிமை மக்களையும் உள்ளடக்குகிறது. "குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளில்" கவனம் செலுத்துவதன் மூலம், சமூகப் பொருளாதார சவால்கள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் எல்லாப் பகுதிகளிலும் சுகாதார அமைப்புகளிலும் இருப்பதை ஒப்புக்கொள்கிறோம். இந்த அணுகுமுறை புவியியலில் இருந்து சூழலுக்கு கவனத்தை மாற்றுகிறது, தடைகளைப் புரிந்துகொள்வதற்கும் பயனுள்ள வலி மேலாண்மை உத்திகளை உருவாக்குவதற்கும் மிகவும் உள்ளடக்கிய முயற்சியை வளர்க்கிறது. 24 நாடுகளிலிருந்து முப்பத்தைந்து பணிக்குழு உறுப்பினர்கள், அவர்களில் 60% க்கும் மேலானவர்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளிலிருந்து (LMICs), இந்த முயற்சிக்கு தன்னார்வமாக பங்களிக்க முன்வந்துள்ளனர்.

**இலக்குகள்:**

2025 உலக ஆண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளில் உள்ள வலிகளை நிவர்த்தி செய்வதில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணும். முக்கியமான ஆராய்ச்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் உயர்தர ஆராய்ச்சிக்கு அதிக நிதியுதவி, வலி பராமரிப்பை மேம்படுத்த மேம்பட்ட சுகாதார தொழில்முறை கல்வி மற்றும் அனைத்து சூழல்களிலும் உயர்தர வலி மேலாண்மைக்கான மேம்பட்ட அணுகலை இது ஆதரிக்கும் கூடுதலாக, இது வலி கல்வி குறித்த மருத்துவப் பயிற்சியை மேம்படுத்துதல், சுய மேலாண்மையை ஊக்குவித்தல் மற்றும் நாள்பட்ட வலிக்கான இடைநிலை மற்றும் பலதுறை பராமரிப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.[1] இது சமூக மட்டத்திலும் உலக அளவிலும் சமத்துவத்தை வளர்க்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளில் ஏன் கவனம் செலுத்த வேண்டும்?**

உலகளவில், வலி என்பது ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதாரப் பிரச்சினையாகும், இது LMIC களிலும், அதிக வருமானம் கொண்ட நாடுகளில் பாதிக்கப்படக்கூடிய மக்களிடையேயும் விகிதாசாரமாக விநியோகிக்கப்படும் ஒரு சுமையைச் ஏற்படுத்துகிறது[2,3] வலி நிலைமைகள் காரணமாக ஏற்படும் இயலாமையின் சுமை அடுத்த தசாப்தங்களில் LMIC களில் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.[4,5] LMIC கள் உலக மக்கள்தொகையில் 4/5 க்கும் அதிகமானவை, ஆனால் உலக மக்கள்தொகையில் இவ்வளவு குறிப்பிடத்தக்க விகிதத்தைப் பராமரிப்பதற்கான ஆராய்ச்சி மிகக் குறைவு.[6] உதாரணமாக, 2017 உலக நோய்ச் சுமை ஆய்வுகள் சில குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளுக்கான (LMICs) தரவுகளை நேரடியாக பயன்படுத்தின, ஆனால் பெரும்பாலான LMIC-களுக்கு அவர்கள் பிற பிராந்தியங்களில் இருந்து முதுகுவலி பரவல் தரவுகளை எடுத்தது பயன்படுத்தினர்.[7]

LMIC நாடுகளில் உயர்தர வலி ஆராய்ச்சியைத் தடைசெய்யும் பல முக்கிய சவால்கள் உள்ளன, அவற்றைக் கடக்க 2025 உலக ஆண்டு பணிக்குழு உதவும்

என்று நம்புகிறது இந்த சவால்களில் தேசிய மற்றும் நிறுவன மட்டங்களில் ஆராய்ச்சி முன்னுரிமை இல்லாதது, கல்வியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களிடையே குறைந்த விழிப்புணர்வு மற்றும் குறைந்த ஆராய்ச்சி நிதி ஆகியவை அடங்கும்.[6,8] மேலும், தனிப்பட்ட ஆராய்ச்சி பதவிகள் அல்லது பயிற்சி பெற்ற ஆராய்ச்சியாளர்கள் மிகக் குறைவாக அல்லது இல்லாமல் உள்ளனர், மேலும் மொழித் தடைகள் ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டை தடை செய்கின்றன. இதன் விளைவாக, விஞ்ஞானிகள் பெரும்பாலும் கொள்ளை வெளியீட்டிற்கு இரையாகின்றனர், இது வெளியிடப்பட்ட வலி ஆராய்ச்சியின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கக்கூடும்.[6,9,10]

பல தாழ்வளர்ச்சி மற்றும் நடுத்தர வருமான நாடுகளில், காயங்கள், தாய்மை மற்றும் குழந்தை ஆரோக்கியச் சிக்கல்கள், தொற்றுநோய்கள் போன்ற பிற முக்கிய சுகாதார பிரச்சினைகள் முன்னுரிமை பெறுவதால், வலிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை.[11,12] ஒரு துரதிர்ஷ்டவசமான விளைவு என்னவென்றால், வலி உள்ளவர்களுக்கு பயனுள்ள சிகிச்சைகள் கிடைப்பது குறைவாகவே உள்ளது.[3] தற்போதைய பராமரிப்பு பெரும்பாலும் உகந்ததாக இல்லை, குறைந்த மதிப்புள்ள (அதாவது, பயனற்றது, பாதுகாப்பற்றது மற்றும் விலையுயர்ந்தது) பராமரிப்பு மற்றும் இரத்தக் கசிவு போன்ற தீங்கு விளைவிக்கும் நடைமுறைகள் பொதுவானவை.[13] இருப்பினும், வலியுடன் வாழும் மக்களுக்கு விளைவுகளை மேம்படுத்தக்கூடிய உள்ளூர் மற்றும் பாரம்பரிய சிகிச்சைகளை சோதிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்வது, சுகாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும், LMIC-களில் வாழும் பில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் மிக முக்கியமானது.

2025 உலக ஆண்டு, அதிக வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள பாதிக்கப்படக்கூடிய மக்கள்தொகை மீதும் கவனம் செலுத்துகிறது, இதில் பழங்குடி மக்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் பல்வேறு கலாச்சார பின்னணிகளைச் சேர்ந்த மக்கள் மற்றும் அகதிகள் அடங்குவர்.[14] வேலைவாய்ப்பு இல்லாமை, வறுமை, தரமான சுகாதாரப் பராமரிப்பு கிடைக்காதது மற்றும் மோதல்கள் காரணமாக LMIC களில் இருந்து பலர் அதிக வருமானம் கொண்ட நாடுகளுக்கு குடிபெயர்கின்றனர். அவர்களின் புதிய நாடுகளில், அவர்கள் பெரும்பாலும் சமூக தனிமைப்படுத்தல், உகந்த

பராமரிப்பு இல்லாதது மற்றும் மோசமான சுகாதார விளைவுகளை எதிர்கொள்கின்றனர். மொழித் தடைகள் அவற்றை மருத்துவ ஆராய்ச்சியிலிருந்து மேலும் விலக்கி, கண்டுபிடிப்புகளின் பொதுமைப்படுத்தலை கேள்விக்குள்ளாக்குகின்றன. இந்தப் பிரச்சினைகள் இருந்தபோதிலும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் போதுமானதாக இல்லை. வலி நிவாரணத்தில் உலகளாவிய சமத்துவத்தை மேம்படுத்துவதற்கு 2025 உலக ஆண்டின் கவனம் இந்த மக்கள்தொகையின் மீது செலுத்துவது மிகவும் முக்கியமானது.

**வெளியீடு:**

வெளியீடுகளில் உண்மைத் தாள்கள், பாட்காஸ்ட்கள், வெபினார்கள் மற்றும் நிபுணர் நேர்காணல்கள் ஆகியவை அடங்கும். *PAIN (வலி)* மற்றும் *PAIN (வலி)* அறிக்கைகளில் தொடர்புடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிறப்பிக்கப்படும். உலகளாவிய வலி சமூகத்துடன் தொடர்பு கொண்டு, பொதுமக்கள், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை நிர்மாணிகளுக்கு உலகமெங்கிலும் தகவல்கள் எளிதில் கிடைக்கக்கூடும் வகையில், தகவல் பத்திரிகைகளை பல மொழிகளில் மொழிபெயர்க்க உதவலை நாங்கள் வரவேற்கின்றோம்.

**இந்த பெரிய உலகளாவிய சவாலை எதிர்கொள்வதில் IASP உடன் இணையுங்கள்:**

2025 உலகளாவிய ஆண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமான அமைப்புகளில் உயர்தர வலி சிகிச்சைக்கான அணுகலை மேம்படுத்த உலகெங்கிலும் உள்ள மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நோயாளி ஆதரவாளர்களை ஒன்றிணைக்கிறது. எல்லைகள் மற்றும் துறைகளுக்கு அப்பால் ஒத்துழைப்பது, வலி சிகிச்சையை மாற்றியமைத்து உலகளாவிய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யும். இந்தப் பகுதிகளை முன்னிலைப்படுத்தவும், முக்கியமான குரல்களைப் பெருக்கவும், வலி மேலாண்மை, ஆராய்ச்சி மற்றும் கல்வியில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோம். 2025

உலகளாவிய ஆண்டு பற்றிய கூடுதல் தகவல்களுக்கும் வளங்களுக்கும், IASP-pain.org ஐப் பார்க்கவும்.

## குறிப்புகள்


1. Cardosa MS. Promoting multidisciplinary pain management in low-and middle-income countries—challenges and achievements. *Pain*. 2024;165(11S):S39-S49.
2. Alva Staufert MF, Ferreira GE, Sharma S, Gutierrez Camacho C, Maher CG. A look into the challenges and complexities of managing low back pain in Mexico. *Glob Public Health*. Jun 2021;16(6):936-946. doi:10.1080/17441692.2020.1808038
3. Sharma S, McAuley JH. Low Back Pain in Low- and Middle-Income Countries, Part 1: The Problem. *J Orthop Sports Phys Ther*. May 2022;52(5):233-235. doi:10.2519/jospt.2022.11145
4. Ferreira ML, de Luca K, Haile LM, et al. Global, regional, and national burden of low back pain, 1990–2020, its attributable risk factors, and projections to 2050: a systematic analysis of the Global Burden of Disease Study 2021. *The Lancet Rheumatology*. 2023;5(6):e316-e329.
5. Gill TK, Mittinty MM, March LM, et al. Global, regional, and national burden of other musculoskeletal disorders, 1990–2020, and projections to 2050: a systematic analysis of the Global Burden of Disease Study 2021. *The Lancet Rheumatology*. 2023;5(11):e670-e682. doi:10.1016/s2665-9913(23)00232-1
6. Sharma S, Verhagen AP, Elkins M, et al. Research from low-income and middle-income countries will benefit global health and the physiotherapy profession, but it requires support. *J Physiother*. Jan 2024;70(1):1-4. doi:10.1016/j.jphys.2023.08.013
7. Tamrakar M, Kharel P, Traeger A, Maher C, O'Keeffe M, Ferreira G. Completeness and quality of low back pain prevalence data in the Global Burden of Disease Study 2017. *BMJ Glob Health*. May 2021;6(5):e005847. doi:10.1136/bmjgh-2021-005847
8. Sharma S, Birnie KA, Wang S, Fernandes Gomes FI, Gibbs JL, Mittinty MM. The value of the International Association for the Study of Pain to career development: perspectives of trainee and early career members. *Pain*. Nov 1 2023;164(11S):S31-S38. doi:10.1097/j.pain.0000000000003061
9. Amano T, Rios Rojas C, Boum Ii Y, Calvo M, Misra BB. Ten tips for overcoming language barriers in science. *Nat Hum Behav*. Sep 2021;5(9):1119-1122. doi:10.1038/s41562-021-01137-1
10. Network TE-P, O'Connell NE, Belton J, et al. Enhancing the trustworthiness of pain research: A Call to Action. *The Journal of Pain*. 2024:104736.
11. Briggs AM, Huckel Schneider C, Slater H, et al. Health systems strengthening to arrest the global disability burden: empirical development of prioritised components for a global strategy for improving musculoskeletal health. *BMJ Global Health*. 2021-06-01 2021;6(6):e006045. doi:10.1136/bmjgh-2021-006045
12. Briggs AM, Jordan JE, Sharma S, et al. Context and priorities for health systems strengthening for pain and disability in low- and middle-income countries: a secondary qualitative

study and content analysis of health policies. *Health Policy Plan*. Feb 13 2023;38(2):129-149. doi:10.1093/heapol/czac061
13. Sharma S, Pathak A, Parker R, et al. How low back pain is managed—a mixed methods study in 32 countries. Part 2 of Low Back Pain in Low- and Middle-Income Countries Series. *Journal of Orthopaedic & Sports Physical Therapy*. 2024;
14. Lin I, Goucke R, Bullen J, Sharma S, Barnabe C. Inequities in pain: pain in low-and middle-income countries and among Indigenous peoples. In: van Griensven H, ed. *Pain: A textbook for health professionals*. 2023:353.

## Author Affiliations

[1] Co-chair, Global Year for Pain Management, Research and Education in Low- and Middle-Income Settings, International Association for the Study of Pain, Washington DC, USA
[2] Physiology Department, Pontificia Universidad Católica de Chile, Santiago, Chile; Millennium Nucleus for the Study of Pain (MiNuSPain), Santiago, Chile.
[3] Chief Scientist for Clinical Research, Pain Management and Research Centre, Royal North Shore Hospital, Northern Sydney Local Health District, Sydney, NSW 2065, Australia
[4] Conjoint Senior Lecturer, Pain Management Research Institute, Kolling Institute, Faculty of Medicine and Health, The University of Sydney and Northern Sydney Local Health District, Sydney, NSW, Australia
[5] Adjunct Senior Lecturer, School of Health Sciences, Faculty of Medicine and Health, University of New South Wales, Sydney, Australia
[6] Postdoctoral Research Fellow, Centre for Pain IMPACT, Neuroscience Research Australia, Sydney, Australia
[7] Visiting Faculty, Department of Physiotherapy, Manipal Academy of Higher Education, Manipal University, Manipal, India

*This factsheet has been translated into Tamil by Ms. Sriveni P T, former Master of Physiotherapy student, Manipal College of Health Professions, MAHE, Manipal, India.*